THIRU G. VASANTHA PAI : Is it not a fact that all the sewage water from the General Hospital comes into the cooum ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, உண்மை தான். அதையும் எப்படித் தடுப்பது என்பது பற்றி யோசித்துக் கொண் டிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வீடுகளில் வரும் கழிவு நீரைப்பற்றி மட்டும் சொன்னார் கள். நானே அந்தக் கேள்வியை கேட்க வேண்டுமென்று தான் இருந் தேன். என் அமைச்சர் அவர்கள் அதை விளக்கவில்லை என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் ஒத்துக் கொண்டேன். அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசினேன். அதை எப்படித் தடுத்து நிறுத்தி வேறு பக்கமாகக் கொண்டு செல்வது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

Representation from the Panchayat Unions.

159 *Q*. THIRU D. SANTOSHAM (on behalf of THIRU D.V.D.' Monte) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether any representation was made to the Government on behalf of the Panchayat Unions in the State to accord permission to appoint teachers according to their requirements ; and

(*b*) if so, the action taken by the Government thereon?

ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து முறையீடு.

திரு. டி. சந்தோஷம் : (திரு. டி.வி.டி' மாண்டி சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளுக்கேற்ப ஆசிரியர்களை நியமிக்க அவற்றிற்கு அனுமதி அளிக்க வேண்டு மெனக் கோரி அவற்றின் சார்பில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

1975 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) : ஆம். தற்பொழுது அரசு அனுமதிக்கும் கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்ற பள்ளிகளுக்கும் மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக பள்ளிக் கல்வி இயக்குநர் பகிர்ந்தளிக்கிருர். அவ்வாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் கூடுதல் ஆசிரியர் பதவிகள் தவிர, ஊராட்சி ஒன்றியங்களே தங்கள் தேவைக்கேற்ப கூடுதல் ஆசிரியர்களை நியமனம் செய்ய அவைகளுக்கு அனுமதி அளிக்கமுடியாது.

திரு. செ. மூத்துசாமி : தலைவரவர்களே, இப்படி டி. இ. ஒ. அவர்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய பதவிகள் நிர்வாகத்திலே இருக்கக் கூடிய தகராறுகள் காரணமாக நிரப்பப்படாமலேயே "சரண்டர்" செய்யப் பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே. அப்படித் தகவல் இல்லை.

Trustees of Arulmigu Ranganathaswami Devasthanam.

*160 *Q.* THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that 2 posts of trustees of Arulmigu Ranganathaswami Devasthanam, Srirangam, have not been filled up from November 1973; and

(*b*) if so, the reason therefor?

அருள்மிகு அரங்கநாத சுவாமி தேவஸ்தான அறங்காவலர்கள்.

திரு. கே. எஸ். கணபதி ; மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி தேவஸ்தானத்தில் இரண்டு அறங்காவலர்கள் பதவிகள் 1973ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து நிரப்பப்படாமல் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மேற்படி திருக்கோயிலின் நிர்வாகத்திற்கென போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி நியமனம் செய்யப்படவேண்டிய மாத்வர் தென்கலை மற்றும் வடகலை வைணவர் வகுப்பினருக்காக இடங்களை